1970 நவம்பர் 28]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கூட்டுறவு முறையிலே தொழில் ஆரம்பித்தால் உதவி செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிக் கூட்டுறவுத்துறையிலே ஆரம்பிக்கப் பல கஷ்டங்கள் ஏற்படலாம். மூலதனம் சேர்ப்பதில் கஷ்டங்கள் ஏற்படலாம். எனவே, அரசாங்கமே முதலில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத்துறையிலே நம்பிக்கை அற்ற நிலையில் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசக் கூடாது. அவர்கள் முயற்சி எடுத்தால் அதை வெற்றிகரமாக முடிக்க முடியும். அவர்களே முன்வந்து தலைமை வகிக்கலாம். பணத்தைப்பற்றிய கவலை வேண்டாம். கூட்டுறவுத்துறையில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அளிப்பதற்கு அதற்காக என்று தனி வங்கி நம்முடைய மாநிலத்திலேதான் இந்திய நாட்டிலேயே இருக்கிறது.

Cauvery river Modernisation Scheme.

* 52 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:
THIRU S. DURAISWAMY:

Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the World Bank has come forward to finance the Cauvery River Modernisation Scheme of the Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்திலுள்ள பழைய டெல்டாப் பகுதியை ரூ. 49 கோடி செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கையொன்று தயாரித்து மத்திய நீர் மின்சக்தி ஆணைக்குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கிக்குழு இத் திட்டம் குறித்து மதிப்பீடு செய்தது. இத் திட்டத்தின் பயன் தேவைகளை அக்குழு ஏற்றுக்கொண்டது. இத் திட்டம் இப்போது மத்திய அரசிடம் முடிவுறா நிலையிலுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மத்திய அரசிடம் முடிவுறாத நிலையிலிருப்பதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அனுமதி பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அப்பொழுது அந்த வேலையைத் துவங்கலாம்.

Lands acquired near railway station at Sundaraperumalkoil

* 53 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether wet paddy field nearly half an acre was acquired by the side of railway gate near the railway station at Sundaraperumalkoil (Thanjavur district) to straighten the road between Kumbakonam and Thanjavur;

(b) if so, when this land was acquired and at what cost; and

(c) the reasons for keeping the land unused?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) 0.73 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை ரூ. 1,748-க்கு 1950-ம் ஆண்டில் உரிமை பெறப்பட்டது.

(உ) இருப்புப்பாதையின் குறுக்கே செல்லும் பாதையை மாற்றியமைப்பதற்காக ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் சாலையை நேர்படுத்துதல், இருப்புப்பாதையின் குறுக்கே செல்லக்கூடிய பாதையை மாற்றியமைத்தல் முதலான வேலைகளை முன்னதாக செயல் படுத்த முடியவில்லை. ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி–நாகர்கோயில்–திருவனந்தபுரம் ரயில்பாதை.

* 54 வினா.—திரு. சு. துரைசாமி:
திரு. வை. சுவாமிநாதன்: } மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலிக்கும், திருவனந்தபுரத்திற்கும் நாகர் கோயில் வழியாக ரயில் பாதை அமைக்குமாறு மத்திய அரசுக்கு பரிவுரை செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்,

(இ) நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரி வரை இணைப் பாதையுடன், திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர் கோயில் வழியாக புதிய இருப்புப்பாதை போடுவதற்காக போக்கு வரத்து ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்திய அரசின் ரயில்வே வாரியம் ஆணையிட்டுள்ளது. இந்தப் போக்குவரத்து ஆய்வுப் பணி நிறைவேறிவருகின்றது.

திரு. சு. துரைசாமி. பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பரிசீலனை முடிந்து நடப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய சர்க்காரின் தயவில் இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR: May I know the priority which this scheme has been assigned by the State Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In November last, the General Manager of the Southern Railway stated that the Railway Board had ordered to carry out a traffic survey of new